# MSC ஏரிஸ் கப்பலில் இருந்த இந்திய பெண் மாணவி நாடு திரும்பினார்

ஏப்ரல் 18, 2024

தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் ஈரான் அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த முயற்சியால், MSC ஏரீஸ் என்ற கொள்கலன் கப்பலின் இந்திய பணியாளர்களில் ஒருவரான கேரளாவின் திருச்சூரைச் சேர்ந்த இந்திய விமானப்படை மாணவி ஸ்ரீமதி. அன் டெஸ்ஸா ஜோசப் இன்று மதியம் கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பாக தரையிறங்கியுள்ளார். அவர் விமான நிலையத்தில், கொச்சி மண்டல பாஸ்போர்ட் அதிகாரி ஜோசப் அவர்களால் வரவேற்கப்பட்டார்.

இந்த விவகாரத்தை தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம் கவனித்து வருவதோடு, கப்பலில் உள்ள மீதமுள்ள 16 இந்திய பணியாளர்களுடன் தொடர்பில் உள்ளது. மேலும் குழு உறுப்பினர்கள் ஆரோக்கியமாக உள்ளனர், அவர்கள் இந்தியாவில் உள்ள அவர்களது குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பில் உள்ளனர்.

மீதமுள்ள MSC ஏரிஸ் கப்பல் பணியாளர்களின் நலனை உறுதி செய்வதற்காக இந்திய தூதரகம் ஈரானிய அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளது. முன்னதாக, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், டாக்டர். எஸ். ஜெய்சங்கர் அவர்கள் இந்த விவகாரம் குறித்து ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அமீர் அப்துல்லாஹியான் அவர்களுடன் பேசியுள்ளார்.

**புது தில்லி**
**ஏப்ரல் 18, 2024**